[illegible] 8 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 6 ஜூலை 10 இதழ் 67
யாழ்ப்பாணம் புதன்கிழமை 19 4-78






## சிங்கப்பூர் வர்த்தக வலயத்தை இலங்கைக் குழு பார்வையிடும்

(கொழும்பு)

சிங்கப்பூர் வர்த்தக வலயத்தை நேரில் பார்வையிடுவதற்காக இலங்கையின் பொறியியல் நிபுணர்களும் அதிகாரிகளும் கொண்ட குழு ஒன்று விரைவில் சிங்கப்பூர் செல்லவிருக்கிறது.

நேற்று நுவரெலியாவில் இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத்தும் சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் திரு. திரு. சின்னத்தம்பி இராஜரத்தினமும் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே இக்குழுவை சிங்கப்பூருக்கு அனுப்புவதென முடிவுசெய்யப்பட்டது.

வெளிநாட்டு அமைச்சர்களிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது இருநாடுகளுக்குமிடையே பொருளாதார உதவிகளை விரிவாக்குவது பற்றி ஆராயப்பட்டது.

இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் சுதந்திர வர்த்தக வலயத்திற்கு சிங்கப்பூர் சகல துறைகளிலும் ஒத்துழைப்பும் உதவியும் வழங்குமென்று திரு. இராஜரத்தினம் உறுதி அளித்தார். [ம-இ]

## சி. ஐ. டி பொலிசார் படுகொலை:

# முருங்கன் பகுதியில் வீடுகளிலும் சோதனை!

## 4 இளைஞர்கள் விசாரணை

(யாழ்ப்பாணம்)

முருங்கன் துப்பறியும் பொலிஸார் கொலை தொடர்பாக அப்பகுதியைச் சுற்றியுள்ள வீடுகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் திடீர் சோதனை நடத்தி வருகின்றார்கள். இச்சோதனையின்போது நான்கு இளைஞர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

[illegible] இரவு 4 மணிக்கு பொலிசாரும் இராணுவத்தினரும் அப்பகுதிகளில் தேடுதல் வேட்டையை ஆரம்பித்ததாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொலையுண்ட சி. ஐ. டி. பொலிசாரின் கார் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இக் காரையும் காடுகளில் தேடி வருகின்றனர். சந்திக்குச்சந்தி பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாகச் சேர்ந்து வாகனங்களைச் சோதனையிட்டு வருகின்றனர்.

சி. ஐ டி. பொலிசாருக்குத் தகவல் கொடுத்து அவர்களை வழி நடத்திக் கூட்டிச்சென்றதாகக் கூறப்படும் இளைஞரின் இருப்பிடத்தை அறிவதிலும் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பஸ்கள், ரயில்களிலும் பொலிசார் சோதனையிட்டு வருகின்றனர். [ச]

## சன்சோனிக் கமிஷன் விசாரணை:

## அநுராதபுரத்தில் 25 பேர் சாட்சியமளிப்பர்

(அநுராதபுரம்)

சன்சோனிக்கமிஷன் விசாரணை அநுராதபுரத்தில் இம்மாதம் 21ம் திகதி ஆரம்பிக்கும்போது 25 பேர் சாட்சியமளிக்கவிருக்கிறார்கள்.

அநுராதபுர மேல்நீதிமன்றத்தில் திரு. எம். சி. சன்சோனி முன்னிலையில் ஆரம்பமாகும் விசாரணை இம்மாதம் 28ம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

வவனியா, அநுராதபுரத்தைச் சேர்ந்த 25 பேர் சாட்சியமளிப்பார்கள் இவர்கள் சார்பில் ஆஜராகியுள்ள சட்டத்தரணி விக்கிரமசிங்கா சாட்சிகளை வழிநடத்துவார்.

பாதிக்கப்பட்டோர் புனர்

(8ம் பக்கம் பார்க்க)

# 100 இளைஞர்கள் இன்று முழங்காவிலில் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

குழாய்க்கிணற்றுத் திட்டத்தின்கீழ் முழங்காவிலில் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்காக நூறு இளைஞர்கள் இன்று அங்கு குடியேற்றப்படவிருக்கின்றனர். முழங்காவிலில் பத்துக் குழாய்க்கிணறுகள் நிறுவப்பட்டுள்ளன.

கோப்பாய், நல்லூர், சண்டி

(8-ம் பக்கம் பார்க்க)

# கூட்டணியின்

## முதல் தேசிய மாநாடு ஆவரங்காலில் அடுத்த மாதம் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு ஆவரங்கால் சிவன்கோவில் முன்றலில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கிறது. 12ம் திகதி ஆரம்பமாகும் இம் மாநாடு தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும்.

கோப்பாய் எம். பி. எஸ். கதிரவேலுப்பிள்ளை தலைமையிலான வரவேற்புக்குழு மாநாட்டிற்கான ஒழுங்குகளைச் செய்து வருகிறது.

வெளியூர்களிலிருந்து வரும் பிரதிநிதிகளும் உறுப்பினர்களும் தங்குவதற்கான இருப்பிட வசதிகளும் உணவு வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

தமிழ்நாட்டிலிருந்தும் இரு பேச்சாளர்களை அழைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக வரவேற்புக்குழுச்செயலாளர் திரு க. சின்னத்துரை தெரிவித்தார்.

வரவேற்புக்குழு விபரம் வரு

(8ம் பக்கம் பார்க்க)

## செல்வா நினைவாஞ்சலி நிகழ்ச்சி:

# ஆர். ஆர் திவாகர்

## உரை நிகழ்த்த வருகிறார்

(யாழ்ப்பாணம்)


மூதறிஞர் செல்வாவின் அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரைநிகழ்த்த இந்திய காந்தி அறநிலையத் தலைவர் திரு. ஆர். ஆர். திவாகர் யாழ்ப்பாணம் வருகின்றார்.

இம்மாதம் 24ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் திரு கே. நேசையா தலைமையில் மாலை 5-45 மணிக்கு திரு ஆர். ஆர். திவாகர் தந்தை செல்வா நினைவு சொற்பொழிவு நிகழ்த்துவார்.

25ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் திரு ஆர் ஆர் திவாகர் தந்தை செல்வா நினைவு சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(8 ம் பக்கம் பார்க்க)


கோலாகலமான திறப்பு விழா ?



# வரி விளம்பரம்

## தேவை

கொழும்பு றெஸ்ரோரன் வெயிற்றர், பார்கிப்பர், திறமை வாய்ந்த சமையல்காரர் உடன் தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும். நம்.77, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 9051

மேற்பார்வையாளர், லேத்மன் (Lathemen), கம்மாலே வேலை செய்பவர்கள், வெல்டர்கள் (Gas & Electric) தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9021

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும், வேலை பழகுபவர்களும்தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவிஸினால் அன் மெற்றல்வேக்ஸ், நீர்வேலி. 8994

காரைநகர் பாலாவோடை அம்மன்கோவிலில் பூசைசெய்வதற்கு ஐயர் தேவை குருக்களாக இருந்தால் விரும்பத்தக்கது. சகல வசதிகளும் உண்டு. நேரில் சந்திக்கவும். ஆ. சு. ஆறுமுகம், பாலாவோடை சந்தி, காரைநகர். 9061

நவராத்திரிக்காலங்களில் மரம் நாட்டுவிழா நிகழ்த்துவதற்கு நெல்லிக் கன்றுகள் தேவை. அவற்றை உண்டாக்கித் தருபவர்களுக்கு தகுந்த பெறுமதி தருவோம். மிஷனைவற் யாழ்ப்பாணம். 9063

## தேவை

நல்லநிலையிலுள்ள சிறிய லேடீஸ் சைக்கிள் ஒன்று தேவை. தொடர்பு: கே. அரசரத்தினம், 550/6, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம். 9071

## விற்பனைக்கு

CE 2984 லொறி V "8" சவளற் எஞ்சினுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பீ. பேரின்பம், 15, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறை. 9049

## வாடகைக்கு

யாழ் மாநகர எல்லைக்குள் தங்குவதற்கு அறைகள் வாடகைக்கு உண்டு. சனி, ஞாயிறு நேரில் வரவும். மு சின்னப்பு, 42/4காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 9059

## வகுப்புகள்

புதன்கிழமை காலை 19ந் தேதி G. C. E. (O. L.) கலை, வர்த்தக, விஞ்ஞான ஆவணிப் பரீட்சை மார்கழி பரீட்சைக்குரிய வகுப்புக்களும், A L. கலை வர்த்தக வகுப்புக்களும், சுருக்கெழுத்து, தட்டச்சு வகுப்புக்களும், ஆங்கில வகுப்புக்களும், தையல் வகுப்புக்களும் ஆரம்பமாகும். A. L. விஞ்ஞான மாலைநேர வகுப்புக்கள் வைகாசி முதலாந்தேதி ஆரம்பமாகும். யாழ்ப்பாணக் கல்விநிலையம், 22, இராமையாச் செட்டியார் லேன், (சாந்தி படமாளிகைக்கு முன்னால்) யாழ்ப்பாணம். 9054

## பின்னுறுதிக் கட்டளை மற்றிய அறிவித்தல்

[இல 84 அ — பிரிவுகள் 524, 532]

யாழ்ப்பாணம், மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற பாக்கியம் வேலாயுதபிள்ளை என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

சின்னத்தம்பி பொன்னையா வேலாயுதபிள்ளை சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவில்,

மனுதாரர்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. த/3357.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 3ஆம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்குஇந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் மூற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

(ஒப்பம்)
V. C. பரமநாதன்,
பதிவாளருக்காக.

1978ம் ஆண்டு தை மாதம் 18 ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 9057

உ

## கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணியசுவாமி கோவில்

நிகழும் காலயுக்தி௵ சித்திரை மாதம் 8-ந் திகதி (21-4-78) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-35—10-25 நிமிஷம்வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் சுப்பிரமணியசுவாமிக்கும் அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திக்கும் கும்பாபிஷேகம் நடைபெறும்.

இங்ஙனம்
தி. சங்கரப்பிள்ளை
ஷை கோவில் ஆதீனம்

9016

## திருமண அழைப்பு

மங்களேஸ்வரன் — வினிதா

திருமதி நா. சிவபாதம் [காலஞ்சென்ற திரு. கை. சிவபாதம், வித்தியாதரிசியின் மனைவி] 'வளர்மதி' சுந்தர்மடம், யாழ்ப்பாணம் அவர்களின் மகன் மங்களேஸ்வரன் [பொறியியலாளர் U.K.] அவர்களுக்கும் இலைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் திரு. T. நடராஜா, 54/2, ஸ்ரேசன் வீதி, தெல்லிப்பளை, அவர்களின் மகள் செல்வி வினிதாவிற்கும் (விரிவுரையாளர், விவசாயபீடம், பல்கலைக்கழக வளாகம், பேராதனை) 21-4-78 வெள்ளிக்கிழமை (சித்திரை 8-ந்திகதி) காலை 8-00—10-00 மணிக்கும் இடையிலுள்ள சுபமுகூர்த்தத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் திருமண வைபவம் நடைபெறும். அத்தருணம் நண்பர்களும், உறவினர்களும் வருகைதந்து புதுமணத் தம்பதிகளை வாழ்த்தி ஏகுமாறு அன்புடன் அழைக்கிறோம். 9070


## மின்தறி ஆலையாளர்களுக்கும், புதிய மின்தறி ஆலைகளை நிறுவவிருப்போருக்கும்

# அரிய சந்தர்ப்பம்

**20%** முற்பணத்துடன், 2 வருட கடனுதவியில் 3 1/2 வீத வட்டியுடன் மீதிப் பணத்தைச் செலுத்தலாம்.

உலகப்புகழ்பெற்ற செக்கோசிலவாக்கிய இன்வெஸ்டா நிறுவன தயாரிப்பான யூட்டாஸ் (UTAS) மின்தறி யந்திரங்களை நாம் விநியோகிக்க முன்வந்துள்ளோம். குறிக்கப்பட்ட தொகைமட்டுமே மேல்கண்ட நிபந்தனையில் விநியோகிக்கப்படும்.

கொள்முதலாளர்களுக்கு எமது நிறுவனம் தொழில்நுட்ப ஆலோசனைகளையும், தொழில் பயிற்சியையும் இலவசமாக வழங்கும்,

Trade Inquiries :

PEC

# PROMOTERS ENGINEERING COMPANY LTD.

844, Point Pedro Road, Nallur, Jaffna, Sri-Lanka.

ஈழநாடு
The Eelanaadu

## சிங்கை—இலங்கை உறவு

சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்யி இலங்கைக்கு வருகை தந்திருக்கிறார்.

நுவரெலியாவில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆரம்பித்துவைத்த தேசிய விவசாய கிருஷிகக் கண்காட்சி வைபவத்திலும் சிங்கப்பூர் பிரதமர் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியிருக்கிறார்.

இலங்கையின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்குமென்ற நம்பிக்கையையும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நாடுகளுக்கிடையில் தொடர்பை வளர்த்துக் கொள்வதன் மூலம் ஒரு நாடு புதிய சிறந்த சமுதாயத்தை துரிதமாக உருவாக்க முடியுமென்றும் சிங்கப்பூர் பிரதமர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

கடந்தகாலத்தில் ஒருவர் உருவாக்கியதை மற்றவர் அழிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இது சிங்கப்பூரில் நல்ல பயனைத் தந்திருக்கிறதென்றும் சிங்கப்பூர் பிரதமர் கூறியிருப்பது சிந்தனைக்குரியது.

சிங்கப்பூரிலிருந்து பிரதமருடன் இரண்டு அமைச்சர்களும் மற்றும் நிபுணர் குழுவும் வந்துள்ளது. நமது நாட்டு அமைச்சர்களுடனும் அதிகாரிகள் குழுவுடனும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இலங்கையில் உருவாகவிருக்கும் சுதந்திர வர்த்தக வலயம் ஓரளவு சிங்கப்பூரைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்ட திட்டம் என்பது தெரிந்ததே.

சுதந்திர வர்த்தகவலயம் சம்பந்தமாகவும் சிங்கப்பூரின் அனுபவத்தையும் ஆலோசனைகளையும் பெறுவது நமது நாடு முன்னேறுவதற்கு பெருமளவில் உதவமுடியும்.

சிங்கப்பூர் சிறிய நாடு. இலங்கையைப் போல இயற்கை வளங்கள் அங்கு இல்லை.

ஆனாலும் மலேசியாவிலிருந்து அமைதியாகப் பிரிந்துசென்றும் சிங்கப்பூர் அடைந்துள்ள முன்னேற்றம் பிரமிக்கத்தக்கது. அங்கு பல இன மக்கள் வாழ்கிறார்கள். வெவ்வேறு மதத்தைப் பின்பற்றுபவர்கள் வாழ்கிறார்கள்.

சகல மக்களும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். நாட்டுப் பற்றுடன் கடின உழைப்பும் தியாகமனப் பான்மையும் அவர்களிடம் செறிந்துள்ளது, அங்குள்ள தலைவர்கள் இதற்கு வழிகாட்டுகிறார்கள்.

சிங்கப்பூர் செல்வம் கொழிக்கும் நாடாக விளங்குகிறது, ஆசியாவில் அது இன்று முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. ஆசிய நாடுகளுக்கிடையில் நெருங்கிய தொடர்பும் ஒத்துழைப்பும் அவசியம் என்ற கருத்தைக்கொண்டிருப்பவர் பிரதமர் லீ

பலதுறைகளிலும் சிங்கப்பூர் இன்று ஆசியாவில் முன்னோடியாகத் திகழ்கிறது.

சுத்தம் சுகாதாரத்திலும், ஒழுங்கு கட்டுப்பாட்டிலும் அது தனியிடம்வகிக்கிறது.

குடியிருப்புப் பிரச்னைக்கும் அது தீர்வுகண்டுள்ளது.

சிங்கப்பூரிடமிருந்து சுதந்திர வர்த்தகவலயம் பற்றிய அறிவையும் ஆலோசனையையும் மட்டுமல்லாது நமது நாடு பின்பற்றவேண்டியதும் ஆலோசனைபெற வேண்டியதுமான விஷயங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

இருநாடுகளுக்கிடையிலும் உறவுமேலும் வலுப்பெற்று நமது நாடும் முன்னேறுவதற்கு உதவுமாக.

# “ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்...”

ஒரு மகிழ்ச்சியான செய்தி' நண்பர் வந்து சொன்னார் நம்பக்கூட முடியவில்லை. என்ன தெரியுமா?

கொழும்பு கொம்பனித்தெருவில் சைவமுன்னேற்றச் சங்கத்தால் 82 ஆயிரம் ரூபாய் செலவில் மிகவும் கஷ்டப்பட்டுக் கட்டியிருந்த மணிமன்றத்தைப் புதிய அரசாங்கம் திருப்பிக் கொடுக்க முன்வந்துவிட்டதாம்! பல ஆண்டுகளாக எவ்வளவோ பேர் முயன்றுபார்த்தும் பறிக்கப்பட்டிருந்த இந்த மணிமன்றம் இப்போது கிடைக்க முடிந்துள்ளது மிக வியப்பல்லவா?

இறைவன் திருவருள் இவையெல்லாம் உண்மைதானா? என்று நமக்கு அடிக்கடி சந்தேகம் வருவதுண்டு. ஆனால் இந்த மணிமன்றம் சற்றும் எதிர்பாராத முறையில் திருப்பக் கிடைக்க முடிந்துள்ளதைப் பார்த்ததும், இறைவன் திருவருளில் நமக்கு நம்பிக்கை பலப்படுவதாக இருக்கிறது.

0 0 0

நான்கு மாதங்களுக்கு முன்பாக, இச்சங்கத்தின் வெள்ளிவிழா நடைபெற்றது. அந்த வெள்ளிவிழா மலரில் ‘‘சங்கத்தின் சரித்திரம் கூறும் கட்டிடமே’’ என்ற தலைப்பில் உள்ளம் உருகி உருகி ‘உண்மை விளம்பி’ ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

‘‘மறைந்தும் மறையாது எம் மனத்திரையில் நின்றலா சங்க மணிமண்டபமே! உன்னை மறக்கத்தான் நினைக்கின்றோம், மறக்க முடியவில்லையே ஆம்! வெறும் கல்லும் மண்ணும் சீமேந்தும் சுண்ணும்புமகலந்து உன்னைக் கட்டியிருந்தால், நீ எம்மிடமிருந்து கைமாறிய ஐந்தாண்டுகளுக்கு முன்பே மறந்திருப்போம், ஆனால் உன்னை எம்மவரின் கண்ணீரும் செந்நீரும் மட்டுமல்லாது அன்றாடம் உழைத்துண்ணும் ஏழைப் பாட்டாளி மக்களின் உலைக்கு இடும் பிடி அரிசியும் சேர்த்தல்லவா கட்டிவளர்த்தோம்!

‘‘தங்கள் உடல் உழைப்பையும் ஊதியத்தையும் தந்தல்லவா உன்னை உருவாக்கித் தந்தார்கள் எம் உண்மைத் தொண்டர்கள். உன் சுவர்களுக்கு உணர்விருந்தால் இதைக் கதை கதையாகக் கூறுமே!.........

மணி மண்டபமே! நீ உயிரோடு இருக்க, சங்கப் பணியாற்றும் பாலகர்கள், படிக்க இடமின்றி வாடகை மண்டபங்களில் கூடி பாடுவதை நீ அறியாய். காலைக் குளிர் என்றும் கடும்பனி என்றும் பாராது தெருவெல்லகம் சிவநாமம் ஒலிக்கச் செய்யும் பச்சிளம் பாலகர்கள் படுக்க இடமின்றி, குளிக்க இடமின்றி தெரு ஓரங்களிலும் வீட்டு விருந்தையிலும் படும் வேதனையை நீ அறியாய்!

### ஐயாறன் எழுதுவது

நீதி, நியாயம், சத்தியம் தோற்றதாகச் சரித்திரம் கூறவில்லை. காலம்தான் இதற்குப் பதில் கூறவேண்டும்.........

‘'உண்மை விளம்பி',

0 0 0

மூன்று மாதங்களுள் பதில் கிடைத்துவிட்டது.

கொழும்பு மாநகரசபை இதற்கு சில நிபந்தனைகளைப் போட்டுள்ளதாம். அதாவது 1. இக்கட்டடத்துக்கு அளிக்கப்பட்ட 60 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈட்டை சங்கம் திருப்பித்தரவேண்டும். 2 இம்மணிமன்றத்தில் செய்துள்ள அபிவிருத்தி வேலைகளுக்காக ரூபா 61 ஆயிரம் தரவேண்டும், 3. வருடாவருடம் மாநகரசபையிடம் இந்த ஒப்பந்தத்தை சங்கம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

இதற்காகச் சில சைவப் பெருமக்கள் சங்கத் தலைவரான ஸ்ரீமதி டாக்டர் இ. வி. சிவயோகம் அவர்கள் தலைமையில் சென்ற வெள்ளிக்கிழமை ரிபோ படமாளிகை மேல் மண்டபத்தில் கூடி, இதற்குப் பணம் திரட்ட ஆர்வத்துடன் முன்வந்தார்கள். ஒரு சைவப் பெருந்தகை ரூபா 2001 அன்பளிப்புச் செய்தார்.

ஒரு மாதத்துக்குள் தேவையான பணம் சேர்ந்துவிடும் என்றும், அடுத்த பூரணையன்று, நால்வர் மணிமன்றத் திறப்புவிழா சிறப்பாக திருவருளால் நடைபெறுமென்றும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கட்டிடத்தை இச்சங்கத்துக்குத் திருப்பிக் கொடுக்கச் செய்த புதிய அரசாங்கத்தைப் பாராட்டவேண்டும். சமீப கலவரங்களில் ஈழச் சைவ மக்களின் பல கோவில்கள் இடிபட்டு, அவர்கள் மனம் மிகவும் புண்பட்டுள்ளது. ஆகவே இக்கட்டிடத்தை இலவசமாகவே இச்சங்கத்துக்குத் திருப்பிக் கொடுக்கச் செய்வது பெரிய காரியமல்ல. மேலும் இந்த இடத்தை நூறு வருட ஒப்பந்தமாக்குவது, சங்க வேலைகள் கேலாக நடைபெறுவதற்கு உதவுவதாக இருக்கும்

0 0 0

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்—
அன்றி அதுவரினும் வந்தெய்தும்,
ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும், எனையாளும் ஈசன் செயல்.

## தருமப்பணம் அதிகரிக்கும்

[கொழும்பு]

ஏழைகளுக்கு வழங்கப்படும் தருமப பணத்தை 25 வீதம் அதிகரிக்க சமூகசேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது

இப்போது நாடு முழுவதும் 1 லட்சத்து 52 ஆயிரம் பேர் தருமப் பணத்தைப் பெற்று வருகின்றனர் இதற்காக அரசு வருடாந்தம் 2 கோடியே 40 லட்சம் ரூபாவைச் செலவிடுகிறது இத்தருமப் பணத்தை அரசு அதிகரிக்க முன்வந்துள்ளதால் அரசுக்கு மேலும் வருடாந்தம் 60 லட்சம் ரூபா தேவைப்படுகிறது என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் [இ]

## இலக்கியப் போட்டி

[வெள்ளவத்தை]

இலங்கை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றம் தமிழ்க் கலை, இலக்கிய போட்டி ஒன்றை நடத்துகின்றது. போட்டி முடிவும் பரிசளிப்பு வைபவமும் இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி மன்றம் சிறுகதைப் போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி ஆகிய போட்டிகளில் பரிசு பெறும் முதல் மூவருக்கும் முறையே 200, 50, 20 ரூபா என்ற விதத்தில் பரிசில்களை வழங்கும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொருளாதார வளர்ச்சி ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சி ஆகிய பொருள்பற்றி கட்டுரைகளும், ‘இளைஞர்களின் இதயக்குமுறல்’ என்ற தலைப்பில் கவிதைகளும் சமுதாயப் பிரச்னைகளைப்பற்றிய கதைகளுக்குமே போட்டியில் முதலிடம் கொடுக்கப்படுமாம். [அ]

### மணிவாக்கு

நன்றாகச் சிந்தனைசெய்தல் புத்திசாலித்தனம், நன்றாக திட்டமிடல் மேலும் அறிவுடையதாகும், நன்றாகச் செய்து முடிப்பது எல்லாவற்றிலும் சிறந்ததாகும்
— ரோமாலோலம்.

### ஆசிரியருக்குக் கடிதம்:

# நயினை அம்பாள் பெயரால் மோசடி

சமயத்தின் பெயராலும் தர்மத்தின் பெயராலும் பொதுமக்களிடம் ஏமாற்றி நிதி திரட்டும் போலிப்பேர்வழிகள் தொண்டர்கள், சாமியார்கள் என்ற பெயரில் உலவிவருகிறார்கள்.

நயினை நாகபூஷணி அம்பாளின் தொண்டர்கள் எனத் தம்மை அறிமுகப்படுத்திப் பொதுமக்களிடமிருந்து பணத்தையும் காணிக்கைகளையும் பெறும் வேஷதாரிகள் பலர் நாட்டின் பலபாகங்களிலும் நடமாடி வருவதாக எமக்குப் பல மெய்யடியார்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பாம்பின் உருவமமைந்த காணிக்கைப் பொருட்களையும் பக்குவமில்லாத விபூதிப் பிரசாதங்களையும் பயன்படுத்தி இறைவியின் அருளுக்காகத் தவங்கிடக்கும் ஏழைமக்களின் இதயங்களை ஏமாற்றி வயிறு கழுவும் எத்தர்களைப் பற்றி பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்பதற்காகவே இதை எழுதுகிறோம்.

தேவஸ்தானத்தின் பெயரால் எந்தவகையான காணிக்கைப் பொருள்களையோ, பூசைநேர்த்தி முதலியவற்றிற்குரிய பணத்தையோ சேகரிப்பதற்கு எவரையும் நியமிக்கவுமில்லை. உரிமை வழங்கவுமில்லை. பொதுமக்கள் தங்கள் பணத்தையோ காணிக்கைப் பொருட்களையோ தபால் மூலமும் நேரிலும் தேவஸ்தானத்துடன் தொடர்புகொண்டு உதவலாம். தெய்வப்பணி செய்பவர்போலத் தம்மைக் கூறிக்கொண்டு வருபவரிடம் சிக்கி ஏமாறவேண்டாம்.

செ. விசாகப்பெருமான்
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

## அநாதைகள் பெயரிலும் மோசடி

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 10ம் திகதி வரை எமது இல்லம் எத்தகைய நிதிசேகரிப்புகளிலும் ஈடுபடமாட்டாது.

எனவே பொதுமக்கள் ஏமாற்றுப் பேர்வழிகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறோம்

புன்னாலைக்கட்டுவன் நீர்வேலி கூகுதிகளில் எம்மிடம் அனுமதி பெறாத ஒருவர் பணம் சேகரித்து வருவதாகவும் அறிகிறோம்

ஆ. கந்தையா
நம்பொறுப்பாளர் கைதடி சைவஅநாதை இல்லம்,

## அடுத்த ஆண்டில் சொந்தக் கட்டிடம்

(வண்ணார்பண்ணை)

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அடுத்த ஆண்டு முதல் சொந்தக் கட்டிடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் இருமாடிக் கட்டிடமொன்றை மூன்றரை லட்சம் ரூபா செலவில் கட்டுவதற்குச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதற்கென வேலணை வங்களாவடியில் ஐந்து பரப்பு நிலம் வாங்கப்பட்டுள்ளதாகவும் இச்சங்கத்தின் பொது முகாமையாளர் திரு செல்லத்துரை தெரிவித்தார். [அ]

## 22 ந் தேதி புனிதசின்னங்கள் வருகின்றன

[வெள்ளவத்தை]

கலாச்சார அமைச்சின் ஏற்பாட்டில் இந்தியாவில் கபிலவஸ்து என்ற இடத்திலுள்ள புனித சின்னங்கள் இம்மாதம் 22ம் திகதி இலங்கைக்கு எடுத்துவரப்படும்.

இப்புனிதசின்னம் கொழும்பு வித்தியோதய பிரிவெனாவில் பத்து நாட்களுக்கு பொதுமக்களின் தரிசனத்திற்குவைக்கப்படும் அதன் பிறகு ஜூன் மாதம் நாட்டின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படும்.

மேற்படி சின்னங்களைக் கலாச்சார அமைச்சர் திரு. ஈ எல் பி. ஹூருல்லே, அமைச்சின் செயலாளர் திரு. நளின் ரத்னாயக்கா, பௌத்த பீடாதிபதிகள் ஆகியோரே இந்தியாவிலிருந்து கொண்டு வருவார்கள்

### விவசாய விஸ்தரிப்பு சேவையாளரின்

## சிங்களத் தேர்ச்சி காலஎல்லை ஜூன் மாதம்வரை நீடிப்பு

(கொடிகாமம்)

சிங்கள மொழி தேர்ச்சி இன்மையால் பாதிக்கப்பட்ட விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்களுக்கு மீண்டும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பிரதேசங்களில் கடமையாற்றும் விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்களுக்கு சிங்கள மொழியில் தேர்ச்சியின்மையால் கடந்த டிசம்பருடன் சேவையிலிருந்து விலகும்படி கடிதம் அனுப்பப்பட்டது. இதைபிட்டு பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் நலன்கருதி வடமாகாணம் விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர் சங்கம் தலையிட்டு 3 மாதகாலம் அவகாசம் பெற்றுக் கொடுத்தது.

இத்தவணை நீடிப்பு மார்ச் 31-ம் திகதியுடன் காலாவதியாகியது.

மீண்டும் தவணை நீடிப்புக் கோரி வடமாகாண விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர் சங்கமும் தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியும் சேர்ந்து கூட்டாக எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியால் சிங்கள மொழி தேர்ச்சியின்மையால் பாதிக்கப்பட்ட விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்களுக்கு மீண்டும் ஜூன் மாதம் 30-ம் திகதிவரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்டுள்ள விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்களைத் தொடர்ந்தும் தங்கள் நிலையங்களுக்குக் கடமைக்குச் செல்லும்படி வடமாகாணம் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் சங்கத்தின் காரியதரிசி திரு. இ. காசிநாதன் கேட்டுள்ளார்.

### சங்கானை ப. நோ. கூ. சங்க மின்தறியில்

# காவலாளி கடமையிலிருக்க 7000 ரூபா துணிகள் திருட்டு

(சங்கானை)

சங்கானை ப. நோ. கூ. சங்க மின்தறி ஆலையில் ஓட்டைப் பிரித்து உட்புகுந்த இனந் தெரியாத திருடர் சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த துணிவகைகளை களவாடிச் சென்றுள்ளனர்.

மூன்றும் பகுதிநேர வேலை நடைபெற்றுக்கொண்டிருந்த போது இரு காவலாளிகள் கடமையில் இருந்தசமயம் நடைபெற்ற இந்த மர்மத் திருட்டுச் சம்பந்தமாக கடமைபுரிந்த காவலாளர் இருவரும் சங்கானை பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். முன்னரும் இதே களஞ்சிய அறையில் துணிக்களவு நடைபெற்றும் எந்த ஒரு சந்தேகநபரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கான்ஸ்டபிள் கருணாரத்ன கொலை:

## சந்தேக நபர்களுக்கு தொடர்ந்து ரிமாண்ட்!

[பருத்தித்துறை]

கான்ஸ்டபிள் கருணாரத்தின கொலை தொடர்பாக கைதான சந்தேக நபர்கள் தொடர்ந்து ரிமாண்டில்வைக்கப்பட்டனர்.

பருத்தித்துறை மேலதிக நீதவான் திரு எம். டி. ஜேசுரத்தினம் முன்னிலையில் சந்தேக நபர்களான எம். யோகசம்பந்தன், க. இந்திரலிங்கம், அ. தருமகுலசிங்கம், வி. சுந்தரலிங்கம் ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் கருணாரத்தின கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

கோர்ட்டில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்ட போது மே மாதம் இரண்டாம் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ஈ)

## கலாசார அலுவல் டைரக்டர்

[வெள்ளவத்தை]

கலாசார அலுவல்கள் திணைக்கள டைரக்டராக திரு. வி. பி. கருணாரட்ண நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நியமனம் கலாசார அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருல்லேயினால் வழங்கப்பட்டுள்ளது.

## ஈச்சந்தீவு — கன்னன்குடா சிறுபோகக் கடன்

(மட்டக்களப்பு)

ஈச்சந்தீவு-கன்னன்குடா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சிறுபோக நெற் செய்கைக்கான கடன் வழங்குவதற்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

கடந்த ஆண்டில் சிறுபோகம் செய்யப்பட்ட காணிகளுக்கு மட்டுமே கடன் வழங்கப்படும். இத்தகைய காணிகளின் பேரில் ஏற்கனவே சிறுபோகச் செய்கைக்கு கடன் வழங்கப்பட்டிருந்தும் பெரும்போகச் செய்கை பண்ணிபிருப்பின் அத்தகைய காணிகளுக்கோ, விண்ணப்பகாரர்களுக்கோ கடன் வழங்கப்படமாட்டாது என மேற்படி சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. இரீன் நிலாமை தெரிவித்துள்ளார். [உ]

## மேலும் 20 இளைஞர்களுக்கு அபராதம்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகர பிரதான வீதிகளில் பக்கம் பக்கமாக சைக்கிளில் சென்ற 20 இளைஞர்கள் நேற்று போக்குவரத்து பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நீதவான் திரு கே. வி. நவரத்தினம் முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோது இவர்களுக்கு தலா 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. போக்குவரத்து பிரிவு இன்ஸ்பெக்டர் என். சேனாதிராசாவினால் இவர்கள் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் 50 இளைஞர்களுக்கு பக்கம் பக்கமாக சைக்கிளில் சென்ற குற்றச் சாட்டின் பேரில் அபராதம் விதிக்கப்பட்டது தெரிந்ததே.

## சைக்கிளில் சென்ற இருவரை பஸ்மோதியது

[சங்கானை]

சைக்கிளில் சென்ற இருவரை இ. போ. சபை பஸ் ஒன்று மோதியதால் இருவரும் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மானிப்பாயிலிருந்து வந்து கொண்டிருந்த பஸ், எதிரில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இருவரையும் மோதியதாம். தாவடி உபதபால் கந்தோருக்கு அண்மையில் இச் சம்பவம் நடந்தது.

### யாழ்ப்பாணத்தில்

## கம்யூ. கட்சி மேதின ஊர்வலம், பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக்கமிட்டியும் அதன் தலைமையிலான தொழிற்சங்கங்களும், வாலிபர் சங்கங்களும் மேதினத்தை ஊர்வலம், பொதுக்கூட்டத்துடன் பிரமாண்டமானமுறையில் யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவுசெய்துள்ளன.

கூப்பன் அரிசி பறிக்கப்பட்டது; வாழ்க்கைச்செலவு உயர்த்தப்பட்டது; தொழிலாளர்களுக்கு எதிரான பழிவாங்கல், தொழில் உறவு வெள்ளை அறிக்கை; தமிழர் பிரச்சனை தீர்க்கப்படாமை போன்ற முக்கிய பிரச்சனைகளில் அரசின் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்தே இம்முறை எமது மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் அமையும் என கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

மேற்படி மேதின ஊர்வலம் காங்கேசன்துறை வீதியில் உள்ள நாச்சிமார் கோயிலடியில் இருந்து ஆரம்பமாகி நகரின் முக்கிய வீதிகளின் ஊடாக கூட்டம் நடைபெறும் யாழ் கடற்கரை மைதானத்தை சென்றடைவதற்கு அனுமதிகோரப்பட்டுள்ளது. [ஈ]

## 'விமல்' காரைநகர் வந்துசென்றார்

[காரைநகர்]

கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபரும் காரைநகர் சீ-நோர் அபிவிருத்தி நிறுவன இயக்குநர்களில் ஒருவருமான திரு. விமல் அமரசேகரா காரைநகரிலுள்ள ஊரிக்கிராமத்திற்குச் நேரில் சென்று அக்கிராமத்தின் அபிவிருத்தி வேலைகளைக்கவனித்துச் சென்றுள்ளார்.

திரு. விமல்அமரசேகராவை ஊரிநல்லொழுக்க வாலிபர் இயக்கத்தலைவரும் காரைநகர் தெற்கு கிராமச்சபை உறுப்பினருமான திரு. ஐ. பரமு மலர்மாலை அணிவித்து வரவேற்றார்.

## சங்கீதப் பரீட்சையில் முதலிடம்

[சுழிபுரம்]

கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வடஇலங்கை சங்கீதசபையின் 1977ம் ஆண்டு ஆசிரியர் பகுதி இறுதிப்பரீட்சையில், வட்டுக்கோட்டை கலாநிலையத்தைச் சேர்ந்த மாணவி செல்வி தங்கராணி விஞசித்தம்பி அகிலஇலங்கையில் முதலிடத்தைப்பெற்றுள்ளார்.

இந்நிலையத்தைச் சேர்ந்த மாணவிகள் ஏனைய பகுதிப் பரீட்சைகளில் முதற்பிரிவுகளும் விசேடசித்திகளும் உட்பட 90 வீதப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். (ஈ)

## நூல்நிலைய நிதிஒதுக்கீடு

[கொடிகாமம்]

சாவகச்சேரி கிராமசபை காரியாலயத்தில் ஒரு பொது நூல்நிலையம் அமைப்பதற்காக கிராமஅபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் 15,000 ரூபா ஒதுக்கியுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் வீதி வேலைகளுக்காக 20,000 ரூபாவையும் ஒதுக்கியுள்ளார்.


# L P காஸ் காட்டும் வழி

★ சுகாதாரத்திற்கு ★ நேரத்தை மிச்சப்படுத்துவதற்கு ★ பணத்தை சேமிப்பதற்கு ★ பாத்திரத்தில் கரி பிடிக்காமல் எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு ★ உணவின் ருசி கெடாமல் இருப்பதற்கு ★ வீட்டு வேலைக்கு ஆள் இல்லை என்ற குறையைப் போக்குவதற்கு ★ சமையல் அறையை எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு இன்றே பாவிக்கத் தொடங்குங்கள். L. P. காஸ்

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள் !

எஸ். பி. சாமி அன் கோ.
193, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7025

தலைமைக் காரியாலயம்,
72, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.
போன் : 22640


### செங்கலடிக் கொள்ளை முயற்சி

## விரல் அடையாளம் பதிவு செய்ய நீதவான் உத்தரவு

### சந்தேக நபருக்கு தொடர்ந்து ரிமாண்ட்

[மட்டக்களப்பு]

செங்கலடி ப. நோ. கூ. சங்க இரண்டு லட்சம் ரூபா கொள்ளை தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் கைவிரல் அடையாளத்தை பதிவுசெய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு நீதவான் திரு. சி. மனோகரா முன்னிலையில் சந்தேகநபர்கள் ஆஜர் செய்யப்பட்டனர். பொலிசார் செய்த விண்ணப்பத்தை தொடர்ந்து கைவிரல்அடையாளத்தை பதிவுசெய்ய நீதவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் கைதாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது பொலிஸ் படப்பிடிப்பாளர் படம்பிடிக்க முயற்சித்தபோது அவர்கள் அதற்கு மறுத்துவிட்டனர்.

சந்தேகநபர்களை ஏப்ரல் 24ம் திகதிவரை ரிமாண்டில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (ஈ)

## மாணவர் சுற்றுலா

[திருமலை]

கரவெட்டி வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த 40 மாணவர்களும் ஆசிரியர்களும், திருமலைக்கு சுற்றுலா வந்துள்ளனர். [ஈ]

# "டியூட்டரிகளினுல் மாணவர் தன்னூக்கம் கெடுகின்றனர்

## பெற்றோர் இதில் கவனம் வேண்டும்"

### அருணோதயா பரிசளிப்பு விழாவில் அதிபர்

(பண்டத்தரிப்பு)

"பல்கலைக் கழகக் கல்வி சம்பந்தமாக எமது நாட்டில் நடைபெற்ற தரப்படுத்தல்முறை பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியது மாத்திரமன்றி மாணவ சமூகத்தைப் பெரிதும் வாதித்தும்விட்டது. இன்றைய அரசாங்கம் தரப்படுத்தல் முறையை நீக்கியுள்ளது. சந்திக்கு முதலிடம் வழங்கப்படும் போது இளைஞர்கள் விரக்தியடையவோ அமைதியை இழக்கவோ வேண்டியநிலை ஏற்படாது தகுதி ஒதுக்கப்பட்டு தரப்படுத்தல்மூலம் தெரிவுகள் நடைபெறும்போது மாணவர்களிடையே உள்ள ஊக்கம் நசுக்கப்படுகின்றது.

இவ்வாறு அளவெட்டி அருணோதயக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் கல்லூரி அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம்குறிப்பிட்டார். தமது ஆண்டறிக்கையை அவர் சமர்ப்பித்து தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது!

"தரப்படுத்தலினுல் ஏற்பட்ட முறையற்றபோட்டியின் காரணமாக உயர்வகுப்பு மாணவர்கள் பெருந்தொகையாக டியூட்டரிகளை நாடுகின்றூர்கள் ஆற்றல் குன்றிய விடத்து இடையிடையே மாணவருக்கு விசேஷ வழிகாட்டல் அத்தியாவசியம் என்பதை மறுப்பதற்கில்லை ஆனுல் பெருந்தொகையான மாணவர்கள் பாடசாலைநேரம் தவிர, சிலவேளை பாடசாலை நேரத்திலும் கூட அதிகாலை முதல் பின்னிரவுவரை டியூட்டரிகளில் காலத்தைக் கழிப்பதினுல் அவர்கள் எவ்வித புறப்பயிற்சியும் இல்லாதவராகின்றனர். தனிமுயற்சி, ஊக்கம், பலவிதமான ஆய்வுகளின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் பழக்கம் போன்ற சிறந்த பண்புகள் மங்கிவிடுகின்றன. கல்வியின் நோக்கமே இந்தத் தனிப்பட்ட நிலையங்களினுல் பாதிக்கப்படுகின்றது. மாணவன் தானே தனது வாழ்க்கையில் ஏற்படும் ஆன்மீகலௌகிக பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஆற்றலைப் பெறுவதே கல்வியின் நோக்கம்; கிளிப்பிள்ளைப் பாடம்செய்து பரீட்சைகளில் சித்தியடைவது தான் கல்வியல்ல: இத்தனிப்பட்ட நிலையங்களுக்கு நமது மாணவர் செல்வதினுல் தன்னூக்கம் தனித்துவம் இழந்து வெறும்இயந்திரமாகிவிடுகின்றனர்.

### பெற்றோரும் மயங்குகின்றனர்

"ஆற்றல்உள்ள மாணவர் கூட இத்தனிப்பட்ட நிலையங்களுக்குபோனுல்தான் பரீட்சையில் சித்தியடையலாமென்று பெற்றோருமே மயங்கிவிடுகின்றூர்கள் உயர் வகுப்புகளில் ஆரம்பமான இவ்விதபோதனை முறைதற்போது சில கீழ்வகுப்புகளில்உள்ள மாணவரிடையேயும் பரவியிருப்பதைப் பார்க்கும்போது கல்வி வளர்ச்சியில் ஈடுபாடுகொண்ட எவரும் கவலைப்படாமல் இருக்கமுடியாது. இதனுல் மாணவரினது ஒழுக்கும் பாடசாலை ஒழுங்கும் பெரும்முரண்பாடு ஏற்படுகின்றது. மாணவர் பாடசாலைக் கல்வியை அலட்சியம் பண்ணும்நிலை ஏற்படுகின்றது. இந்த அபாயமான போக்கைக் கட்டுப்படுத்துவதற்குப் பாடசாலை ஆசிரியர்கள் ஈடுபாடும், கடமையுணர்வும்கொண்டு செயல்படவேண்டும். பெற்றோரும் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் அவர்கள் பாடசாலையிலும் ஆசிரியர்களிலும் நம்பிக்கை வைக்க வேண்டும் அதாவது பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் போக்கில் பெரும் மனமாற்றம் ஏற்படவேண்டும். மனமாற்றத்தினுல் மாத்திரம் தான் நிலைமை சீரடைய முடியும்.

### கல்வித்திட்டத்தில் புதிய மாற்றம்

1972ம் ஆண்டு முதல் எமது கல்வித்திட்டத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து தற்போதைய அரசு மேலும் பல பயன்தரு மாற்றங்களைச் செய்து மாணவ சமுதாயத்தைச் சிறப்புடனும், பொலிவுடனும் விளங்க வைக்க ஆவன செய்கின்றது முதற்படியாக ஐந்து வயது நிரம்பிய பாலகர்களை அனுமதித்து ஒழுங்கானதும், கட்டுப்பாடானதுமான திட்டத்தின் அடிப்படையில் கல்விபுகட்டுவதற்கு வழி கோலியுள்ளது. இதேவேளை பாடசாலைகளில் இப்புதிய கல்முறையைச்சிராகப்பயிற்றுவிப்பதற்குத் தகுதிவாய்ந்த ஆசிரியர்களையும், வசதியான கட்டிடங்களையும் ஒழுங்கு செய்து கொடுப்பது அரசாங்கத்தினதும், சமூகத்தினதும் தலையாய கடமையாகும்"

# "விரைவில் தமிழினம் விடுதலை பெறும்" அமிர்

எதிர்க்கட்சித்தலைவரும் காங்கேசன்துறைத்தொகுதி எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் இவ்விழாவில் விசேஷமாகக் கலந்துகொண்டுபேசுகையில் கூறியதாவது!

"உலகின் பல பாகங்களிலும் சிதறிவாழ்ந்த யூதஇன மக்கள் பல்வேறு கொடுமைகளை அனுபவித்தபின்னர் தமக்கெனஒரு பிரதேசம் இருந்தால்தான் தாம் சுதந்திரமாகவாழமுடியும் என்று உணர்ந்தார்கள். 60 லட்சம் யூதஇனமக்களை நஞ்சூட்டிப் படுகொலைசெய்த சர்வாதிகாரி ஹிட்லரின் கொடுமை அவர்களை இஸ்ரேல் என்னும் தனிநாட்டை உருவாக்கத் தூண்டியது. இன்று வல்லரசுகளில் ஒன்றாக சுபீட்சப் பாதையில் செல்லும் இஸ்ரேல் நாட்டிற்கு வெளி நாடுகளில் வாழும் யூத இன மக்கள் தம் பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றிவருகின்றனர், எமது தமிழ் சமூகம் இந்நாட்டில் தொடர்ந்து அனுபவித்துவரும் கொடுமைகளால் சுதந்திர இனமாக வாழமுற்பட்டுநிற்கின்றது. இதற்கு வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் சமூக, பொருளாதார கல்வி வளர்ச்சிக்கான உதவிகளை அளிக்கவேண்டும். மலேசியாவில் வாழும் சின்னப்பு தம்பதிகள் இக்கல்லூரியின்வளர்ச்சியில் மிக அக்கறை கொண்டு ஒரு புலமைப்பரிசில் திட்டத்தை வழங்கியதை மிகவும் பாராட்டுகின்றேன்'

இவ்விழாவில் சின்னப்பு தம்பதிகள் வழங்கிய புலமைப் பரிசில் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரைபாற்றிய திரு. அமிர்தலிங்கம் தமது உரையில் தொடர்ந்து குறிப்பிட்டதாவது!

'இங்கிருந்து வேலைவாய்ப்புகள் பெற்று வெளிநாடுகளில் சீரும்சிறப்புமாக வாழும்தமிழ் மக்கள் தமது தாயகத்துமக்களுக்குத் தம்மாலான தொண்டுகளை ஆற்றவேண்டும் ஐயாயிரம் ஆண்டுகள் வரலாற்றுப் பெருமை வாய்ந்த எமது தமிழினம் இந்த 20ம் நூற்றுண்டிலும் மேலைத்தேச மக்களினுல் சிறந்த நாகரிகப்பின்னணி கொண்ட சமுதாயம் என்று போற்றப்படுகின்றது. பிறந்த நாட்டிலேயே இன்று அரசியல் அநாதைகளாக அல்லல்பட்டு நிற்கும் தமிழினம் விரைவில் விடுதலைபெறும். இஸ்ரேல் நாட்டு அபிவிருத்திக்கு வெளி நாட்டிலுள்ள குறிப்பாக அமெரிக்க நாட்டிலுள்ள யூதர்கள் எவ்விதம் உதவிகள் செய்கின்றூர்களோ அதேபோல மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து ஆகிய தேசங்களில் இங்கிருந்து சென்றுவாழும் தமிழர்கள் சந்தர்ப்பம் வரும்போது தேவையான உதவிகளை எமக்கு வழங்கி உதவவேண்டும்'

வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு தி மாணிக்கவாசகர் கல்லூரி நிறுவுனர் நினைவுப் பேருரையை நிகழ்த்தினூர். பரிசளிப்புப் பேருரையை உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிரதிஆணையாளர் திரு. கு ப. தம்பிப்பிள்ளை நிகழ்த்தினூர். திருமதி தம்பிப்பிள்ளை போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினூர். பெற்றோர் ஆசிரியர்சங்கச் செயலாளர் திரு க. அருளம்பலம் நன்றியுரையாற்றினூர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [அ]


## யாழ். ரேட்டரி நடத்தும் பஸ் நடத்துநர் தெரிவு கூப்பன்

போட்டி முடிவு தினம் 25-4-78

நடத்துநரின் பெயர் ..............................

பதிவு இலக்கம் ..............................

அனுப்புபவரின் பெயர் ..............................

அனுப்புபவரின் விலாசம் ..............................

திகதி .............. ..............................

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா. சோ. பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (வி)


# 'எம். ஜி. ஆர். ஆட்சியில் கலை, இலக்கியம் வளர்கிறது"

### தமிழகப் பிரமுகர் பாராட்டு

[வெள்ளவத்தை]

"தமிழக முதல்வர் எம் ஜி. ஆர் ஆட்சியில் ஊழல்இல்லாத நிர்வாகம் நடைபெறுகிறது. கலை இலக்கியத்துறை மறுமலர்ச்சி பெறுகிறது. நலிந்துபோன கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்பு அளிக்கும் திட்டம் உருவாகி வருகிறது கலைஞர்களின் எதிர்கால வாழ்க்கை ஒளிமயமானதாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை."

இவ்வாறு இலங்கைக்கு வருகைதந்திருக்கும் 'முஸ்லிம் குரல்' சிறப்பாசிரியரும் எழுத்தாளரும் பேச்சாளருமான நாகூர் கவிஞர் எம். எஸ். முசாத்பேக் "ஈழநாடு' பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்தார்.

இவர் திரைப்படப்பாடகர் மொகிதீன்பெக்கின் இல்லத்தில் தங்கி ஈழத்துக்கலைஞர்களையும் நண்பர்களையும் சந்தித்தார்.

ஜனுப் முசாத்பேக் மேலும் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் எம். ஜி. ஆர். ஆட்சிக்குப்பின்னர் புதிய தோர் எழுச்சி ஏற்பட்டுள்ளது. கலைஇலக்கியத்துறையில் புதிய சிந்தனைகள் பிறக்கின்றன. இளைய தலைமுறை எழுத்தாளர்களிடையே புதிய பார்வைகளும் புதுமைக்கருத்தோட்டங்களும் தோன்றி வருகின்றன.

இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சிக்காக தமிழகமுதல்வரின் அனுசரணையுடன் மதுரை பல்கலைக்கழகத்தில் உமறுப்புலவர் தமிழ்ப்பேரவை என்ற பிரிவை நிறுவி இலக்கிய ஆராய்ச்சிக்காக இரண்டுலட்ச ரூபாவை தமிழகஅரசு மானியமாக ஒதுக்கியுள்ளது.

எனவே இதுபோன்ற கலை, இலக்கிய மறுமலர்ச்சிக்காக தமிழகஅரசு பல உதவிகளை நல்கி வருகின்றது. நாடகம், சினிமா ஆகிய துறைகளில் உழைத்து இப்பொழுது நலிந்துபோய் உதவியின்றி இருக்கும் கலைஞர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கும் திட்டம் ஒன்றை தமிழகஅரசு அமுல்படுத்த உள்ளது.

# கொழும்பில் நடந்த வடிவேலன் படப்பிடிப்பு!

(வெள்ளவத்தை)

''வருவான் வடிவேலன்'' திரைப்படத்திற்கான நடிகர் முத்துராமன், நடிகை சந்திரகலா சம்பந்தப்பட்ட சில காட்சிகளை டைரக்டர் கே சங்கர் கொழும்பில் படமாக்கினூர்.

நடிகர்முத்துராமன், நடிகை சந்திரகலா 'வருவான் வடிவேலன்' படப்பிடிப்புக்காக சனிக்கிழமை கொழும்பு வந்து சேர்ந்தார்கள்.

நடிகர் முத்துராமன், சந்திரகலா நடிக்கும் சில காட்சிகளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சிலிங்கோ ஹோட்டல், கல்கிசை கடற்கரை, மொறட்டுவ ஆகிய இடங்களை கமிரா இயக்குனர் ராஜாராம் மின்னல் வேகத்தில் படமாக்கினூர்.

டைரக்டர் சங்கர் நடிகர் முத்துராமனுக்கும் சந்திரகலாவிற்கும் காட்சிகளை விளக்க கதாசிரியர் ஆர். கே. சண்முகம் வசனங்களை சொல்லிக்கொடுக்க ஒளிப்பதிவாளர் ராசாராம் படமாக்கினூர்.

டைரக்டர் கே. சங்கருக்கு உதவியாக இலங்கையைச் சேர்ந்த 'நான் உங்கள் தோழன்' டைரக்டர் எஸ். வி. சந்திரன் பணியாற்றினூர்.

# "இலங்கை நடிகர்களுக்கும் இடம்பெற்றுக்கொடுப்பேன்'

### கதாசிரியர் சண்முகம் கூறுகிறூர்

[வெள்ளவத்தை]

இலங்கை கலைஞர்களை சந்திக்க ஆசைப்படுகிறேன். நான் சம்பந்தப்பட்ட திரைப்படத்தில் இலங்கை நடிகர் நடிகையர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க ஏற்பாடு செய்வேன். இங்கு தயாரிக்கப்பட்டு 'வாடைக் காற்று' திரைப்படத்தை ஒய்வு கிடைக்கும்போது பார்ப்பேன்.

இவ்வாறு இலங்கை வந்திருக்கும் 'வருவான் வடிவேலன்' திரைப்பட கதாசிரியர் திரு. ஆர். கே. சண்முகம் தெரிவித்தார்.

மேலும், அவர் கூறியதாவது

இப்பொழுது தமிழக முதல்வராக இருக்கும் எம். ஜி. ஆர் நடித்த பதினைந்து படங்களுக்கு கதைவசனம் எழுதியுள்ளேன். பத்மினி பிக்சர்ஸாரின் உதவி டைரக்டராக பணியாற்றியதுடன் 'ஆயிரத்தில் ஒருவன்' படத்திற்குகதைவசனம் எழுதியுள்ளேன்.

இலங்கையில் நடிப்புத் திறமைமிக்க பல நடிகர்கள் இருப்பதாக அறிகிறேன். அவர்களுக்கு தமிழக திரைப்படங்களில் நடிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பேன். இதற்காக இலங்கைக் கலைஞர்களை சந்திக்கவிரும்புகிறேன்.

## மற்றொரு கூட்டுத் தயாரிப்பு பேச்சு

[வெள்ளவத்தை]

தமிழகத்திலிருந்து வருகை தந்த புகழ் பெற்ற டைரக்டரான திரு. பி. மாதவனுடன் இலங்கை இந்திய கூட்டுத்தயாரிப்பில் திரைப்படமொன்றை தயாரிப்பது சம்பந்தமாக சிங்களப்பட டைரக்டர் வில்பிறட் சில்வா பேச்சுவார்த்தை நடத்தினூர்.

யாகின்தான் இலங்கை தயாரிப்பில் கூட்டு டைரக்டர்களில் ஒருவராக பணியாற்றிய வில்பிறட்சில்வா வீ. கே. டி. பிலிம்ஸாரின் ''தெய்வம்தந்த வீடு'' சினிமான் கோப் திரைப்படத்தை டைரக்ட் செய்துள்ளார்.

''டைரக்டர் மாதவனுடன் கூட்டுத்தயாரிப்பு சம்பந்தமாக ஏற்கனவே இந்தியா சென்றிருந்த பொழுதும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன் இதைப்பற்றி ஜூன் மாதம் இந்தியாவிற்கு செல்லும் போது பேசிமுடிவு செய்வோம் இந்த கூட்டுத்தயாரிப்பில் இருநாட்டு கலைஞர்களுக்கும் தகுந்த சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று டைரக்டர் வில்பிறட் சில்வா தெரிவித்தார்.

# 39 பேருக்கு ஆயுட்சிறை!

## ஹரிஜனர் நால்வர் கொலையுண்டதன் விளைவு

[புதுடில்லி]
மத்திய பிரதேசத்தில்நான்கு ஹரிஜன விவசாயிகளைக் கொலைசெய்த குற்றச் சாட்டின்பேரில் உயர் சாதியினர் எனக் கருதப்படும் முப்பத்தொன்பது பேருக்கு நீதிபதி ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

1976ம் ஆண்டில் அரசாங்கம் வழங்கிய நிலத்தில் குடியேறிய ஹரிஜனர்களை ஒரு கோஷ்டியினர் சென்று தாக்கியதில் நான்குபேர் மாண்டனர். மற்றும்பலர் காயமடைந்தனர்.

இத்தாக்குதல் சம்பந்தமாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கிலேயே மேற் குறிப்பிட்டபடி ஆயுட்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

## அமெரிக்கா படிப்படியாக விலகும்

[வாஷிங்டன்]
இந்துமகாசமுத்திரப்பகுதியிலுள்ள சர்ச்சைக்குரிய தீவாக விளங்கும் டியாகோகார்ஷியாவிலிருந்து அமெரிக்கா படிப்படியாக விலகிக் கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பத்து ஆண்டுகளுக்கு முந்திய படத்தைப் பார்த்தார் சிவாஜி

[வெள்ளவத்தை]
''பத்தாண்டுகளுக்கு முன்னால் தயாரிக்கப்பட்ட 'மஞ்சள் குங்குமம்' திரைப்படத்தைப் பார்க்கும் பொழுது நீங்கள் இடைவிடாது ஆண்டு தோறும் பல படங்களை தயாரித்திருந்தால் சிறப்பாக இனி மாத்துறையில் முன்னேறி இருப்பீர்கள்''

இவ்வாறு வத்தளை விஜயா ஸ்டுடியோவில் 'மஞ்சள் குங்குமம்' திரைப்படத்தைப் பார்த்த நடிகர்திலகம் சிவாஜி கணேசன் குறிப்பிட்டார்.

மேற்படி தகவலை மஞ்சள் குங்குமம் திரைப்படத்தில் கதாநாயகனை நடித்துள்ள நடிகர் ஸ்ரீசங்கர் தெரிவித்தார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்காக பிரத்தியேகமாக விஜயா ஸ்டுடியோவில் பத்தாண்டுகளுக்கு முன்னால் தயாரிக்கப்பட்ட 'மஞ்சள் குங்குமம்', திரையிட்டுக் காட்டப்பட்டது

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், அவரது செயலாளர் திரு குருமூர்த்தி, நகைச்சுவை நடிகர் தேங்காய் சீனிவாசன், 'மஞ்சள் குங்குமம்' தயாரிப்பாளர் ஜி நாராயணசாமி, டைரக்டர் எம் பி பாலன், நடிகர் ஸ்ரீசங்கர், 'பைலட் பிரேம் நாத்' தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோர் இப்படத்தைப் பார்த்தனர்.

## சோவியத் சமஷ்டியின் அரசியல் யாப்பு!

மாஸ்கோ [டாஸ்]
ருஷ்ய சமஷ்டியினது புதிய அரசியல் யாப்பின் வாசகம் இன்று இங்கு வெளியிடப்பட்டது. இது இந்த ஒன்றியக் குடியரசின் சுப்ரீம் சோவியத்தால் நேற்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நாடு தழுவிய அளவிலான விவாதத்திற்காக இந்த அரசியல் யாப்பின் நகல் முன்னர் வெளியிடப்பட்ட போதுஇதற்கான திருத்தங்கள் செய்யப்பட்டன.

நூற்றுக்கும் அதிகமான ராஜ்யங்களையும் தேசிய இனங்களையும் கொண்ட மிகப் பெரிய சோவியத் குடியரசு ருஷ்ய சமஷ்டியாகும்; இதன் ஜனத்தொகை 13 கோடி 65 லட்சமாகும்;

கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் திகதியன்று அமுலுக்கு வந்த சோவியத் ஒன்றியத்தின் புதிய அரசியல் யாப்போடு தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட தஸ்தாவேஜு முற்றிலும் இசைவாலதாய் உள்ளது. அதே வேளையில் ருஷ்ய சமஷ்டியின் தேசியத் தனித் தன்மைகளையும் அது கணக்கில் எடுத்துக் கொள்கின்றது. இக்கூட்டத் தொடரில் பிரதிநிதிகள் குறிப்பிட்டதைப் போல, குடியரசின் அடிப்படைச் சட்டமானது 'சோஷலிஸ ஜனநாயகம் மேலும் வளர்கின்ற நோக்கில் சமஷ்டியில் உள்ள மக்களின் ஐக்கியத்தையும், நட்புறவையும் வலுப்படுத்துகின்ற கம்யூனிஸ்ட் நோக்கங்களுக்கேற்ப உருவாக்கம் செய்கின்ற நோக்கில் பணியாற்றும்.

...

இலங்கைக் கலைஞர்கள் எதிர்காலத்தில் சுடர் விட்டுப் பிரகாசிக்கப் போகிறார்கள் என்று நடிகர் திலகம் வாழ்த்தினார்.

## திருட்டு

[பண்டத்தரிப்பு]
பண்டத்தரிப்பு பத்திமா கோவிலடியைச் சேர்ந்த லோறன்ஸ் என்ற விவசாயியின் 3000 ரூபா பெறுமதிமிக்க நீர் இறைக்கும் யந்திரம் திருடப்பட்டது பற்றி சண்டிலிப்பாய் பொலிஸ்நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. பொலிசார் இத் திருட்டு தொடர்பாக புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [உ]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## நீதிமன்ற விற்பனை விளம்பரம்

வழக்கு இல: ஈடு / 9768.
காரைநகர் நெடுங்காடு அருணாசலம் தம்பிப்பிள்ளை
வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ரேட்டு, கொழும்புத்துறை, கந்தையா செட்டி குமாரசாமி
எதிராளி

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் ஈடு / 9768 இல வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி, வீடும் 1978ம் வருடம் வைகாசி மாதம் 10ம் திகதி (1978-5-10) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதலும் வட்டியும் ரூபா 13,400/ ம் மேலும் ரூபா 8000/ வருடமொன்றுக்கு நூற்றுக்கு பத்து (10) வட்டி வீதம் வழக்குஅணைந்த திகதியாகிய 1968ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 23ம்திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1974ம் ஆண்டு ஆடி மாதம் 22ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 538/64 இதில்நடைபெற்றசெலவு ரூபா 370-99 நடைபெறவேண்டிய செலவு ரூபா 107-20 மேலதிக சமயா சமயச் செலவு ரூபா 110/45ம் இதில் 15-5-75 கொடுக்கப் பட்ட ரூபா 7500/- கழித்து மிகுதி கொடுக்கவேண்டியிருப்பதாலும்,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை உலிலடியும் பெரியவழவும் இருபுலமும் நில பர. 2 5/16ல் குளி 1½ இருபிரிவும் நில பர. 2 குளி 7 1/8 வீடும் அடுக்களையும், பனைகளும் மற்றும் பயிர் வகைகளும், இந்தப் பரப்பு இரண்டு குளி ஏழுடன் எட்டில் ஒன்றுக்கும் எல்லை கிழக்கும் வடக்கும் S. கோவிந்தபிள்ளையின் ஆதனம், மேற்கு நாராணபிள்ளை நவரத்தினத்தின் ஆதனம், தெற்கு ரேட்டு, இதடங்கலும்.

சோ. சிற்றம்பலம்,
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
59, நெடுங்குளம் வீதி, ஏலவிற்பனையாளர், மதிப்பீட்டாளர்
அரியாலை, யாழ்ப்பாணம்.
15-4-1978. 9064

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

இல: ஈடு/598
இராமசாமி கைம்பெண் கண்மணியம்மா
நீராவியடி, யாழ்ப்பாணம் —வழக்காளி

எதிராக

1. கந்தையா நாகரத்தினமும்
2. பெண் சிவபாக்கியசுந்தரமும் இருவரும்
சித்தங்கேணி. —எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் 598ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியையும் அதன் உள் இருக்கும் வீட்டையும் 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 2ம் திகதி (2-5-78) செவ்வாய்க்கிழமை 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி 7460/, 27-3-75 தொடக்கம் 5-3-76 வரைக்கும் 4000/-க்கு வருடம் ஒன்றுக்கு 12 வீத வட்டியும் அதன் பின்னரும் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை வருடம் ஒன்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 669-80 சதம், இதில் 2000/- கொடுபட்டமையினாலும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை மேற்குஇறை: ''பெரிய தோட்டம்'' பரப்பு நிலை இலாச்சம் 3½ மூன்றரையும் வீடும். வான்பயிர் செய்பயிர்களும், கிணற்றுப்பங்கும், எல்லை கிழக்கு சண்முகம் கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனம், வடக்கு கையொழுங்கை. மேற்கு ரேட்டு தெற்கு குமாரசாமி பெண் நேசம்மாவின் ஆதனத்துக்குப் போகும் கையொழுங்கை இதடங்கலும்.

மூ. விஜயராசன்,
விற்பனை விலைமதிப்பாளர்.
கொக்குவில் மேற்கு,
கொக்குவில், 10-4-78. 9062



**Rio** (Jaffna) (phone:7607) Daily 10-30, 4-45, 7-00 9-30
JOHNTHAW - DENNIS WATERMAN
in
**SWEENEY**
ஒரு நகரத்துத் தனவந்தரின் பொழுதுபோக்கு-MURDER
கொலைகளைத் துப்புத்துலக்கதுப்பறியும்நிபுணர்-SUSPENSE
துப்பறியும் நிபுணர் வேலை நீக்கம்-TERROR
கொலைகாரர் கண்டுபிடிக்கப்பட்டனரா-MYSTERY
தனவந்தரின் கதி என்ன? - KIDNAP
MURDER—MURDER—MURDER
[Color]

**வெலிங்டன்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
**கிரகப்பிரவேசம்** (கலர்)

**லிடோ** போன்: 7692 வெற்றிநடை போடுகிறது
சிவபாதவிருதயர், சந்திரகலா
(யாழ். நகர்) நடித்த
**தென்றலும் புயலும்**

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர், விஜயா, நாகேஷ்
நடித்த
**நல்லநேரம்** (புதிய பிரதி)

3வது ஜனாதிபதி வாரம்
**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா
நடித்த
**விக்கிரமாதித்தன்**
(புதிய பிரதி)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
**ஜானகி சபதம்**

வெற்றிகரமான 50 வது நாள்
**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ
நடித்த
**ஊருக்கு உழைப்பவன்**

3-வது வெற்றி வாரம்
**ராணி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
**வாடைக்காற்று**

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7648
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி நடிக்கும் **கந்தன்கருணை** ஈஸ்ட்மன் கலர்

விசேட படக்காட்சி: தினசரி காலை 8-30 மணிக்கு மட்டும் சிறந்த ஹாஸ்ய நடிகர் சார்லி சப்ளினின்
'BEST OF CHARLIE CHAPLIN'

**றீகல்** (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30 இரவு 9-45
ராஜேஸ்கன்னா - ஷர்மிளாதாகூர்,
நடித்த
**ராஜா ராணி**
RAJAH RANI
ஹிந்தி-கலர்

[மன்னார்]

''எமது நாட்டுப் படங்களை இந்தியநாட்டுப் படங்களுடன் போட்டியிடக்கூடிய அளவிற்கு சிறப்பாயிருக்கின்றன. எமது நாட்டுத் தமிழ்ப்படங்களையும் எமது ரசிகர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பழக வேண்டும். அப்போதுதான் எமது நாட்டுத் தமிழ்ப் படங்கள் வளர்ச்சியடையும்'' இவ்வாறு மன்னார் குமரன் படமாளிகையில் 'தென்றலும் புயலும்' ஆரம்ப விழாவன்று உரையாற்றிய மன்னார் அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன் குறிப்பிட்டார். இவ்விழாவை மன்னார் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் செயலாளர் கலைவாதி கலீல் ஏற்பாடு செய்திருந்தார்.

## முகமாலைக் கிராமாட்சி மன்றம் கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் அரச நன்கொடை வேலைகளுக்கு 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 03ம் திகதி (03-5-78) புதன்கிழமை காலை 10-00 மணி வரை இக் கிராமாட்சி மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து ''சீல்'' வைத்த கேள்விகள் மேற்படி கிராமாட்சி மன்ற நிர்வாகஸ்தர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். 25-4-78, 02-05-78 ஆகிய திகதிகளில் மாத்திரம் காலை 9-00 மணி முதல் பி.ப 2-00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப் பிணைப்பணமாக ரூபா 50/-ம் கேள்விப்பத்திரப்பணமாக ரூ. 20/-ம் செலுத்தப்படவேண்டும். கேள்விப்பத்திரப் பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. கேள்விக்காரரை முடிவாகத் தெரிவுசெய்து கேள்விகளை ஏற்பதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் மேற்படி கிராமாட்சி மன்ற நிர்வாகஸ்தருக்கு பூரண உரிமை உண்டு. மேற்படி வேலைகளைச் செய்து முடிப்பதற்கு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட கால எல்லைக்குள் வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு நிர்வாகஸ்தர் அவர்களிடம் பாரம் கொடுக்கப்படவேண்டும்.

வேலைகள் விபரம்

1. சோவானம் ரோட் வேலை,
2. வேம்போடுகேணி கச்சார்வெளி வீதி வேலை.

சி. அம்பலவாணர்,
நிர்வாகஸ்தர்,
முகமாலைக் கிராமாட்சி மன்றம்,
பளை.
பளை. 17-4-78. 9074

**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30,
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**எல்லாம் உனக்காக**

**நாகம்மாள்** (கிளிநொச்சி)
தினசரி
6-45, 10-00
விஜயகுமார்
நடித்த
**தாயில்லாக்குழந்தை**

**வெலிங்டன்** (கல்முனை)
தினசரி
6-30, 9-30
சிவாஜி - மஞ்சுளா
**மனிதனும் தெய்வமாகலாம்**

## ''எங்கள் நாட்டுப்படங்களையும் ஏற்றுக்கொள்ள ரசிகர்கள் பழகவேண்டும்''

மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்த அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் 'இதுவரை வெளியான தமிழ்ப் படங்களைவிட தென்றலும் புயலும் வெகு சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன். ஏனென்றால் பழம் பெரும் ஒளிப்பதிவாளரான திரு. எம். ஏ. கபூரின் டைரக்ஷனில் வெளியாகி இருக்கும் இப்படம் சிங்களப்படங்களைப் போல் சிறப்பாகவே இருக்கும். ஜனாப் கபூர் பல பரிசில்கள் பெற்றவர். ஏராளமான சிங்களப் படங்களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றியவர். எனவே அவரது திறமையில் எனக்கு அபரித நம்பிக்கையுண்டு''

விழா அமைப்பாளரான கவிஞர் கலைவாதி கலீல் பேசுகையில் தனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுவதாகச் சொன்னார். ''ஏனென்றால் மன்னார் மகன் டைரக்ட் செய்த படம் என்பதோடு அவர் எனது உடன் பிறந்த சகோதரனுமாவர் என்றும் குறிப்பிட்டார்.

பழம் பெரும் நடிகரான தேவன் அழகக்கோனும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். திரு. கபூர் தான் நடித்த இரண்டு படங்களுக்கு ஒளிப்பதிவாளராகக் கடமையாற்றியிருக்கிறார். 'கடமையின் எல்லை' 'டாக்ஸி டிரைவர்' என்பவையே அவையாகும். கபூர் சிறந்த உழைப்பாளி அவரது திறமைக்கு இப்படம் ஒரு எடுத்துக்காட்டாக அமையும்'' என்றார்.

படமாளிகை உரிமையாளரான திருமதி பாலசுப்பிரமணியமும் உரையாற்றினார். விழாவுக்கு மன்னார் அரசாங்க அதிபர்களான திரு. செல்வரத்தினம், திரு. வேதநாயகம், விசேட ஆணையாளர் திரு. ஜோசப் செல்வநாயகம் மன்னார் பிரதம கல்விபதிகாரி ஜனாப் சரீம் உட்படப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அடுத்தவாரம் தென்றலும் புயலும் தயாரிப்பாளரையும் கலைஞர்களையும் அழைத்து கருத்தரங்கு ஒன்று நடத்த உத்தேசித்திருப்பதாக கலைவாதி கலீல் கூறினார்.

......

## குற்றத்தை ஒப்புக்கொண்டார்

[கொடிகாமம்]

ஆண் வேடமணிந்து தங்கச் சங்கிலியை திருடியதாக குற்றம்சாட்டப்பட்ட அன்னக்கிளி அம்மாலு என்ற இருபது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவிலில் நிறுவப்பட்ட விசேட நீதிமன்றில் இவ்வழக்கு விசாரணைசெய்யப்பட்டது.

அச்சிறுமியின் கைவிரல் அடையாளத்தை பதிவுசெய்யுமாறு உத்தரவிட்டதை நீதவான் கே. பாலகிட்ணர் தீர்ப்பு வழங்குவதை ஒத்தி வைத்தார்.

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த ஐயாத்துரையின் 10 மாதக் குழந்தையின் அரைப்பவுண் காப்பை திருடியதாக அன்னக்கிளி அம்மாலு மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது,

## மலேசிய நடிகரும் ஈழத் தமிழ்ப் படத்தில்

[வெள்ளவத்தை]

தங்கமணி பிலிம்ஸாரின் ''நெஞ்சுக்கு நீதி'' தமிழ்ப் படத்திற்கான ஆரம்ப பூஜை புத்தாண்டில் 'சிலோன் ஸ்டூடியோவில் நடைபெற்றது.

ஆரம்ப பூஜையுடன் நடிகை சந்திரகலா சம்பந்தப்பட்ட படக்காட்சி ஒன்றும் படமாக்கப்பட்டது. கமிராவை எம். ஏ. கபூர் கையாள சுண்டிக்குளி சோமசேகரன் டைரக்ட் செய்தார்.

தமிழக நடிகர் ஸ்ரீகாந்தும் ஈழத்து நடிகர் டீன்குமாரும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கவிருக்கும் இப்படத்தில் நடிகரான சிவாஜி ராஜாவும் முக்கியபாத்திரத்தில் நடிக்கவிருக்கிறார்.

நெஞ்சுக்கு நீதி திரைப் படத்தின் ஆரம்ப பூசையில் டைரக்டர் வில்பிறட் சில்வா எம் வி பாலன், நடிகர் டீன் குமார் எஸ். ராமதாஸ் கே ஏ ஜவாகர். எம். எம். ஏ. லதீப், சந்திரகலா, ஈழத்து ரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மே மாதம் நடிகர் ஸ்ரீகாந்த் இலங்கைவந்ததும் படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெறும் என்று படப்பிடிப்பு நிர்வாகி ஒருவர் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

## ''இஸ்லாமிய சமூகத்தின் விடிவெள்ளி''

[வெள்ளவத்தை]

இஸ்லாமிய சமூகத்தின் விடிவெள்ளியான அறிஞர் அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ் தனக்காக மட்டுமல்லாமல் தன் சமூகத்துக்காகவும் வாழ்ந்தார். அவரால் சமூகம் முன்னேற்றமடைந்தது. அஸீஸ் ஏனைய சமூகத்தவராலும் விரும்பப்பட்டார்

இவ்வாறு அகிலஇலங்கை வை. எம். எம். ஏ அஸீஸ் நினைவான தொழில்நுட்பப் பயிற்சிநிலையத்தைத் திறந்து வைத்துப் பேசிய ஜனாப் எம். எம் சமால்தீன் குறிப்பிட்டார்,

இயக்கத் கட்டத்திட்டத் தலைவர் ஜனாப் மக்கிஹாஸீம் நன்றிதெரிவித்துப் பேசினார். பாகிஸ்தான் விபிய தூதுவராலயப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். (அ)

## தேவை

''மஞ்சுளா நெசவு நிலையம் சின்னூலடி தல்கோடை காரைநகருக்கு கைத்தறி தெரிந்த பெண் பிள்ளைகள் ஐந்து பேர்கள் உடனடியாக தேவைப்படுகின்றன. தங்குவதற்கும் சமைத்து சாப்பிடுவதற்கும் போதிய வசதியளிக்கப்படும்.

தொடர்புகொள்ளுமிடம்;

ரஞ்சனாஸ்
No. 17-18 நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
9060

# "தமிழகத்தில் எம். ஜி. ஆர். ஆட்சி சிறப்பாக உள்ளது"

## நடிகர் முத்துராமன் கருத்து

(வெள்ளவத்தை)

தமிழகத்தில் நடிகர் எம். ஜி. ஆரின் ஆட்சி சிறப்பாக நடைபெறுகிறது. எம். ஜி. ஆர். நடிகர்களுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார். முதல்வராக இருந்துகொண்டு எம். ஜி. ஆர். மீண்டும் நடிப்பதில் தவறில்லை. தாராளமாக நடிக்கலாம்.

இவ்வாறு கொழும்புபிறைட்டன் ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் "வருவான் வடிவேலன்" படப்பிடிப்புக்காக இலங்கை வந்துள்ள நடிகர் முத்துராமன் குறிப்பிட்டார்.

அகில இலங்கை முத்துராமன் ரசிகர் மன்ற ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சந்திப்பில் நடிகர் முத்துராமன், நடிகை சந்திரகலா, கதை வசனகர்த்தா ஆர். கே. சண்முகம், தயாரிப்பாளர் லட்சுமண செட்டியார் ஆகியவர்களுக்கு பத்திரிகையாளர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு நடிகர் முத்துராமன் தொடர்ந்து பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:

நாடக மேடையிலிருந்து திரைக்கு வந்தவன் நான். பதினான்கு வயதிலிருந்து நாடகங்களில் நடித்து வருகிறேன். சேவாஸ்டேஜ் சகஸ்ரநாமம் குழுவில் பல நாடகங்களில் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளேன்.

சக்தி நாடகசபா, நவாப் ராஜமாணிக்கம் குழு, ஆகிய குழுக்களின் நாடகங்களில் நடித்துள்ளேன். 'பொலிஸ்காரன் மகள்', 'காசேதான் கடவுளடா', 'வீட்டுக்கு வீடு' போன்ற நாடகங்கள் திரைப்படமாக வந்துள்ளன.

நாடகமேடையில் நான் பெற்ற பயிற்சியே இன்று எனக்குத் திரைப்படங்களில் பல்வேறு பாத்திரங்கள் ஏற்று நடிப்பதற்கு ஒத்துழைப்புத் தருகிறது. நாடகப்பயிற்சி ஒரு நடிகனுக்கு மிகவும் அத்தியாவசியமானது.

இதுவரை 150 படங்களுக்கு மேல் நடித்துவிட்டேன். பத்தும் படங்களுக்கு மேல் நடித்துக்கொண்டிருக்கிறேன். 'தீர்க்க சுமங்கலி', "உறவு சொல்ல ஒருவன்" ஆகிய படங்களில் நான் நடித்த நடிப்பை பலர் பாராட்டியுள்ளார்கள்.

ஆரம்ப காலத்தில் பலபடங்களில் நடித்திருந்தாலும் 'நெஞ்சில் ஓர் ஆலயத்'தின் மூலம் டைரக்டர் ஸ்ரீதர் என் சினிமா உலக முன்னேற்றத்திற்கு பெரும் ஒத்துழைப்பு நல்கினார். இப்பொழுது எஸ். பி. முத்துராமன் டைரக்ட் செய்யும் பல படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறேன்.

நான் நடிக்கும் படங்களுக்கு யாரையும் சிபாரிசு செய்வதில்லை. என்னுடைய பாத்திரத்திற்கு ஏற்ற வகையில் நடிகைகளை தெரிவு செய்வார்கள்.

அதில் நான் தலையிடுவதில்லை.

நான் இலங்கைக்கு வருவது இதுவே முதல் தடவை. கோலாலம்பூர் மாத்திரமே சென்று இரண்டுநாட்கள் தங்கியுள்ளேன். இலங்கை என்னை ரொம்ப கவர்ந்த நாடு. கதிர்காமக்கந்தனின் திருவருளால் மீண்டும் வருவேன்.

### என்னைக் கவர்ந்த விருந்தோம்பல்

இங்கு நான் சந்திப்பவர்கள் எல்லோரும் எனக்கு என்ன தேவையென்று கேட்கிறார்கள். உங்கள் விருந்தோம்பல் பண்பு என்னை பெரிதும் கவர்ந்தது. அது உங்களுக்கு கைவந்தகலை.

பத்திரிகையாளர் சார்பில் மாணு ஐக்கின் வரவேற்புரை நிகழ்த்த அந்தனி ஜீவா நன்றியுரை கூறினார்.

---

# 'குற்றவாளியல்ல' இந்திரா வாதம்

## ஷா கமிஷன் வழக்கு மே. 9-ல் மறுவிசாரணை

புதுடில்லி, ஏப். 18

நெருக்கடிகால அத்துமீறிய செயல்கள்பற்றி விசாரணை செய்துவரும் ஷா கமிஷன்முன் ஆஜராகி சாட்சியமளிக்கத் தவறியமைக்காக தம்மீது தொடரப்பட்ட வழக்கில் தாம் குற்றவாளி அல்ல என்று முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

விசாரணைக் கமிஷன் சட்டத்தின் கீழ் கமிஷனின் அழைப்பை ஏற்று கமிஷன்முன் ஆஜராகி சத்தியப் பிரமாணம் எடுத்து வாக்குமூலம் அளிக்க மறுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் திருமதி காந்திக்கும் முன்னாள் அமைச்சர் பிரணப் குமார் முகர்ஜிக்கும் எதிராக ஷா கமிஷன் தொடர்ந்திருந்த வழக்கு இன்று டில்லி மெட்ரபொலிட்டன் மாஜிஸ்திரேட் திரு. பி. கே. ஜெயின் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

தம்மீது அரசியல் பழிவாங்கலை மேற்கொள்ளவே இக்கமிஷன் அமைக்கப்பட்டது என்றும் தாம் சாட்சியமளிக்கத் தவறியமைக்காகத் தாம் குற்றவாளி அல்ல என்றும் திருமதி காந்தி தெரிவித்தார்.

பிரணப்குமார் முகர்ஜியும் இதுபோன்றே தெரிவித்தார்.

மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை அடுத்த மாதம் 9-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (இ)

---

# மாஜி இத்தாலியப் பிரதமர் சுட்டுக் கொலை!

ரோம், ஏப். 18

கடத்திச் செல்லப்பட்ட முன்னாள் இத்தாலிய பிரதமர் திரு. அல்டோ மொரோ துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று கடத்தல்காரர்கள் அறிவித்துள்ளனர்.

அவரின் சடலம் ரோமுக்கு 120 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ரியற்றி என்ற நகரில் உள்ள சண்ணாம்புக் கல்லறையில் போடப்பட்டுள்ளது என்றும் கடத்தல்காரர்கள் பத்திரிகை அலுவலகம் ஒன்றுக்கு தெரிவித்த தொலைபேசித் தகவலில் தெரிவித்துள்ளனர்.

இதை அடுத்து 100-க்கு மேற்பட்ட பொலிசார் குறிப்பிட்ட சண்ணாம்புக் கல்லறையுள்ள பகுதியில் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

இதே வேளையில் கடத்தல்காரரின் செய்தி பூரணமாக நம்பக்கூடியதாக இல்லை என்றும் முன்னர் வெளிவந்த அறிக்கைகளுக்கும் இச்செய்திக்கும் பலத்த முரண்பாடு உள்ளதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கு முன் கடத்தப்பட்ட திரு மொரோவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக கடத்தல்காரர் கடந்த ஞாயிறன்று அறிவித்தது தெரிந்ததே. (இ)

---

### பஸ்ஸில் முன் பக்கம் ஏறலாமா?

### கைதடியில் திடீர் விவாதம்?

(யாழ்ப்பாணம்)

பஸ்ஸில் முன்பக்க வாசலால் பிரயாணிகள் ஏறலாமா? என்பது பற்றி நேற்றுக் காலை கைதடி சந்தியில் திடீர் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

பிரயாணி ஒருவர் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் பஸ் சாரதி, கண்டக்டர், பிரயாணிகள் கலந்து கொண்டனர்.

கைதடி சந்தியில் பிரயாணி யொருவர், பஸ்ஸின் முன்பக்க வாசலால் ஏறியதைத் தொடர்ந்து சாரதி அதனை ஆட்சேபித்து பஸ்ஸை விட்டு கீழ இறங்கினார். இதைத் தொடர்ந்து கருத்தரங்கு ஆரம்பமானது.

பிரயாணிகள் எவரும் முன்பக்க வாசலால் ஏறக்கூடாதென்றும் அதற்குத் தான் அனுமதிக்கப்போவதில்லையென்றும் முன்பக்கத்தால் ஏறியபிரயாணி இறங்கினால்தான் தொடர்ந்து பஸ் செல்லும் என்றும் சாரதி தமது ஆரம்ப உரையில் கூறினார்.

இதைத்தொடர்ந்து பின்பக்கவாசலில் பிரயாணிகள் மிக நெருக்கமாக நின்றதாலேயே அப்பிரயாணியைதான் முன்பக்கத்தால் ஏறுமாறு அனுப்பியதாகவும் அவருக்கு டிக்கட் வழங்கியதாகவும் கண்டக்டர் கூறினார்.

பஸ்ஸில் இடங்கிடைக்காத பிரயாணி ஒருவர் பேசுகையில் அப்பிரயாணி டிக்கட் பெற்றுக்கொண்டுதான் முன்பக்கத்தால் ஏறினாரென்றும் அவரிடம் டிக்கட் இல்லாவிட்டால் அவர்தான் அபராதம் கட்டவேண்டிவரும் என்றும் கூறினார்.

இதற்கிடையில் முன்பக்கத்தால் ஏறிய பிரயாணி பின்பக்கத்திற்குவந்து ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். இதன்பின் பேசிய பிரயாணிகள் சந்தோருக்கு செல்லவேண்டும் என்றும் கருணைகாட்டுமாறும் கேட்டுக்கொண்டனர். இதன்பின் பஸ் புறப்பட்டது. சுமார் இருபது நிமிடம் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

---

### "இசைக்குயில்" அமைச்சர் பாராட்டு

(கொழும்பு)

"இந்த மதுரமான குரலின் கீதத்தை அமைதியுடனும் வியப்புடனும் ரசித்துக் கொண்டிருந்தேன். இடையிலே அருகிலிருந்தவரிடம் பாடுபவர் யார்? என்று கேட்டபோது திருமதி சரஸ்வதி பாக்கியராசா என்றார்".

பண்டித ஜவஹர்லால்நேரு திருமதி எம். எஸ் சுப்புலட்சுமியை இந்தியாவின் இசைக்குயில் என்றார். நாம் திருமதி சரஸ்வதி பாக்கியராசாவை ஈழத்தின் இசைக்குயில் என்போம்"

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற ஹம்சாநந்தி பாக்கியராசாவின் 'நாட்டிய அமுது' நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகம், நிகழ்ச்சியின் பின்னணியில் பாடிக்கொண்டிருந்த திருமதி சரஸ்வதி பாக்கியராசாவை இவ்வாறு தமது உரையில் புகழ்ந்துரைத்தார். (ம)

---

### மீண்டும் பஸ் சேவை

(மட்டக்களப்பு)

கடந்த சில மாதங்களாக தடைபட்டிருந்த கரவெட்டி ஆயித்தியமலை பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஆயினும் மேற்படி பஸ் சேவை காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு தடவை மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. இதனால் பிரயாணிகள் இடைப்பட்ட நேரத்தில் கஷ்டப்படுகின்றனர்.

---

### ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று பிற்பகல் நடைபெறவிருந்த அகில இலங்கை தமிழ் மொழி மூலம் கல்வி கற்பிக்கும் பாடசாலை அதிபர்களின் பொதுக்கூட்டம் இம்மாதம் 22-ம் திகதி ஞாயிறு முற்பகல் நடைபெற விருப்பதாக சமூக பொருளாதார கல்வி கலாச்சார அபிவிருத்திப் பேரவையின் பொதுச்செயலாளர் அறிவிக்கிறார்.

பேரவை இம்மாதம் 21-ம் திகதி ஆரம்பிக்கும் ஆசிரிய பயிற்சியை முன்னாள் பலாலி ஆசிரியபயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. திரு. கந்தசாமி ஆரம்பித்துவைப்பார். கல்விபதிப் பிரம்மஸ்ரீ இ. லட்சுமணஐயரும் கலந்து கொள்வார். (அ)

---

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வண்ணை வடமேற்குக் கிளையின் மாதாந்தக் கருத்தரங்கு இம்மாதம் 22ம் திகதி சனிக்கிழமை மாலை சிவப்பிரகாசம் வீதியிலுள்ள பணிமனையில் திரு. இ. விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. கரிகாலன், திரு. க. சச்சிதானந்தன் திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் உரையாற்றுவர்.

---

### 14 வயது பையன் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சுமார் 15 வயது மதிக்கத்தக்க பையன் ஒருவன் நேற்றுக் காலை யாழ் புகையிரத நிலையத்தில் திடீரென மயக்கமுற்று பின் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

காக்கிக் காற்சட்டையும் பச்சைநிற நீளக்கை ஷேர்ட்டும் அணிந்திருக்கும் இப்பையனின் சடலத்தை இன்னும் எவரும் அடையாளம் காணவில்லை. யாழ் ஆஸ்பத்திரி சவச்சாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. (இ)

---

### கூட்டணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு: திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தலைவர், திரு. க. சின்னத்துரை செயலாளர், திரு. ச. லோகேஸ்வரன் பொருளாளர், திரு வ. நடேசலிங்கம் உபதலைவர், திரு. ஆ. வேலுப்பிள்ளை உபசெயலாளர், நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் செ. சபாரத்தினம், த. திருஞானசம்பந்தர், கே. நித்தியானந்தம், இ. சிவபாதம், வே. சின்னத்தம்பி, வ. நவரத்தினம், வை. இளையதம்பி, இ. சிவஞானம், இ. அந்தோனிப்பிள்ளை மு. சபாரத்தினம். (க-அ)

---

### செல்வா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். வளாகத்தில் நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்வார்.

இம்மாதம் 26ம் திகதி காலை 8-30 மணிக்கு தந்தைசெல்வா நினைவாலய வளவில் நடைபெறும் அஞ்சலிக்கூட்டத்திலும் திரு ஆர் ஆர் திவாகர் உரை நிகழ்த்துவார்.

இம்மாதம் 27ம் திகதி வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு ஏ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் கூட்டத்திலும் திரு திவாகர் உரைநிகழ்த்துவார்.

28ம் திகதி பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் முன்னாள் நீதியரசர் திரு ரீ எஸ் பெர்னாண்டோ தலைமையில் நடைபெறும் கூட்டத்திலும் உரைநிகழ்த்துவார்.

Now Showing
Regal (Jaffna)
Daily 4-45, 7-00 and 9-30 p.m.
Heroes of Telemark
(Colour)

---

### சன்சோனி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வுக்கழகத்தின் சார்பிலும் சில சட்டத்தரணிகள் ஆஜராவார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்தும் சில சாட்சிகள் அனுராதபுரத்தில் சாட்சியமளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

### 100 இளைஞர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிப்பாய், தெல்லிப்பளை ஆகிய இடங்களைச் சேர்ந்த நூறு வாலிபர்கள் இன்று குடியேற்றப்படுவார்கள்.

இந்நிகழ்ச்சியில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு ஏ ஏ ஜோசேப் மற்றும் காணி அதிகாரிகளும் கலந்து கொள்கர்.

அடுத்தமாதம் முற்பகுதியில் மேலும் இருநூறு இளைஞர்கள் இங்கு குடியேற்றப்படுவார்கள். இக்குடியேற்றத்திட்டத்தின் கீழ் 15 000 ஏக்கர் நிலத்தில் உபஉணவுப் பயிர் செய்கைபண்ணப்படும் நூறு இளைஞர்களின் ம் மக்கள் வங்கி, இலங்கைவங்கி, ஹற்டன் நாஷனல்வங்கி ஆகியவை உதவியளிக்கும்.

---

### யாழ். விஞ்ஞான பீடம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப்பல்கலைக்கழக யாழ். வளாக வட்டுக்கோட்டை பிரிவில் நேற்று விஞ்ஞான வகுப்புகள் ஆரம்பமாகி அமைதியாக நடைபெற்றுவருகிறது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna Telegram Eelanaadu Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.